**ஹிங்குரக்கொட பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஹிங்குரக்கொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சிய பொருட்கள் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலே மாகாண சபைகள் திணைக்களத்தினால் பெறப்பட்டிருந்த ரூபா 99,918 பெறுமதியான புத்தகங்கள் கணக்குகளுக்கு உட்படுத்தப்படாமை மற்றும் சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 195,219 பெறுமதியான புத்தகங்களை ரூபா 152,127 என குறிப்பிட்டதனால் நூலக புத்தகங்கள் ரூபா 143,010 வினால் குறைவாக குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஆ) ஹிங்குரக்கொட பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் ரூபா 58,405,927 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்டுள்ள வியாபாரக் கட்டிடத் தொகுதியின் முழு பெறுமதியில் ரூபா 40,661,274 ஜயந்திபுர நூல்நிலைய கட்டிடத்திற்கும் மற்றும் புலஸ்திம முன்பள்ளிக்கு புதிதாக பகுதியொன்றை இணைத்துக் கொள்வதற்காக செலவான முறையே ரூபா 487,807 மற்றும் ரூபா 793,640 செலவுகள் உட்பட மொத்தம் ரூபா 41,942,721 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல வருடங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற வருமானத்திற்கான வைப்பு மீதிகளான ரூபா 1,226,727 நிதித் தரவுகள் கூற்றிலே நடைமுறை பொறுப்பினுள் குறியீடுகள் இரண்டின் கீழ் காணப்பட்டதனால் நடைமுறைப்பொறுப்பு அந்த பெறுமதியில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) வட கிழக்கு மாகாண சபைகளின் சேவைகளை மேம்படுத்துகின்ற செயற்திட்ட (NELSIP) நிதியத்தின் கீழ் பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் வியாபாரத்தொகுதியை நிர்மாணிப்பதற்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா9,777,242 கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பொது பராமரிப்பு வேலைத்திட்டத்திற்கு உரிய மூலதனச் செலவு ரூபா 567,565 நிதிக்கூற்றுக்களில் கொண்டுவரப்படாததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான மேலதிகம் அந்தபெறுமதியில் கூடுதலாக காணப்பட்டது.

(ஊ) மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு கட்டணத்திற்கான ஒதுக்கீடு இடம்பெற்றிருக்கவில்லை.

(எ) அன்பளிப்பாக சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த படகு, பயணப் படகு மற்றும் நீர் பவுசர் ஆகியவற்றின் பெறுமதிகளை இனங்கண்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 10 வருடங்களுக்கு முன்பிருந்து இடம்பெறுகின்ற தேசிய வருமான ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய ரூபா 3,633,582 வை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) பல வருடங்களாக முன்கொண்டுவரப்பட்டிருக்கின்ற ரூபா 4,540,522 ஒப்பந்த முற்பண மீதி மற்றும் ரூபா 2,184,642 முற்பண மீதிகளை தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகளின்மை

தேவையான தகவல்களை முன்வைக்காமையால் ரூபா 471,661,972 தொகையான 10 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணங்காமைகள்

#### 1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | | | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | - | |
| | (i) | பிரிவு 24 | | பிரதேச சபையினால் நிர்வகிக்கப்படுகின்ற பாதைகள் மற்றும் ஒழுங்கைகளுக்கு நிரந்தர அடையாளம் மற்றும் எல்லையை குறித்தல், திட்டத்தை ஒழுங்கு செய்தல் இன்னும் அதற்கு பெயர் பட்டியலொன்றை தயாரித்து விளம்பரப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. |
| | (ii) | பிரிவு 158 | 2,594,115 | நிலுவையாக உள்ள வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள் | | | |
| | (i) | விதி 33 | - | ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் சபையினால் வீதவரி செலுத்துவதை தட்டிக்களித்துள்ள நபர்கள் சம்பந்தமாக பட்டியலொன்றை தயாரித்து சொத்துக்களை தடை செய்யும் பிடிஆணை ஒழுங்கு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) | 59 தொடக்கம் 63 வரையான விதிகள் | - | எல்லா வருடங்களின் ஆரம்பத்திலேயே அதிகாரப் பிரதேசத்திற்குள் இடம்பெறுகின்ற வேலைகள் சம்பந்தமாக கணக்கெடுப்பு நடத்தப்பட்டு பட்டியலொன்று ஒழுங்கு செய்திருக்கவில்லை என்பதுடன் வேலைக்கான குத்தகையை செலுத்தும்படியான அறிவித்தல் அனுப்பப்பட்டிருக்கவில்லை. குத்தகை செலுத்துதலை தட்டிக் களிக்கின்றவர்களின் பெயர் படிவமொன்று தயாரிக்கப்பட்டு அறவிடப்பட வேண்டிய குத்தகையை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) | விதி 127 | 3,209,789 | 13 வாக்குப்பண குறைநிரப்பு பதிவேடு செலவிற்காக சபையின் முழுமையான அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | விதி 154 | | அனைத்து உப காரியாலயங்கள் சம்பந்தமாகவும் சேகரிக்கப்படுபவைகள் சம்பந்தமாக கணக்கு படிவம் பி.எஸ்.9 மாதிரிப் படிவத்தின் பிரகாரம் சபையின் பிரதான காரியாலயத்தில் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | விதி 180 | - | பணம் அல்லது களஞ்சிய நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக செயற்படுகின்ற மற்றும் வருமானங்களை சேகரிக்கின்ற காரியாலங்களில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை பெற்றிருக்கவில்லை. |
| (vi) | விதி 188 -190 | - | 2014 வருடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட வருடாந்த பொருள் கணக்கெடுப்பின் பின்னர் வருடாந்த பொருள் கணக்கெடுப்பொன்று இடம்பெற்றிருக்கவில்லை. |
| (vii) | விதி 218 | | சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பரிசோதனையொன்று மீளாய்வாண்டிலும் மற்றும் முன்னைய வருடத்திலும் இடம்பெற்றிருக்கவில்லை. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | | |
|---|---|---|---|
| (i) | XIX ஆவது பந்தியின் பிரிவு 7 | - | இடமாற்றம் மற்றும் ஓய்வு பெறுதல் காரணமாக அரசாங்க இல்லங்களில் குடியிருப்பதற்காக உள்ள தகைமைகள் முடிவடைந்த 05 உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,816,876 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய செலவினம் ரூபா 16,564,229 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

(அ) அரச வங்கிகள் 02 இல் ரூபா 114,168 மீதிகளுடன் 02 கணக்குகளில் 03 வருடங்கள் மற்றும் 06 வருடங்களிலிருந்து செயலிழந்த நிலையில் காணப்பட்டது.

(ஆ) சபைக்கு சொந்தமான அரசாங்க இல்லமொன்று கூலி அறவிடப்படாமல், ஒப்பந்தமொன்று இல்லாமல் அரசாங்க காரியாலயத்திற்காக வழங்கப்பட்டிருந்தது. இதற்கு முன்னர் அமைச்சின் பிரதேச காரியலாயமொன்றை நடாத்துவதற்கு கூலி அறவிடப்படாமல் வழங்கப்பட்டிருந்த இந்த இல்லத்தின் நிலுவை மின்சார கட்டணமான ரூபா 102,982 மற்றம் நிலுவை நீர் கட்டணமான ரூபா 28,233 வை சபையினால் நிதியத்திலிருந்து 2016 செப்தெம்பரில் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த நிலுவைப் பணத்தை உரிய நிறுவனத்திடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் ஜயந்திபுர வங்கியில் பேணப்பட்டு வருகின்ற நடைமுறைக் கணக்கின் மீதி ரூபா 196,023 ஆக இருந்த போதும், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் அது ரூபா 229,403 ஆக காட்டப்பட்டிருந்தது. அடிக்கடி காட்டப்படுகின்ற இந்த வேறுபாட்டை தீர்த்து வைப்பதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 2007 ஆம் வருடத்திலிருந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் கையிலுள்ள பணமாக காட்டப்படுகின்ற ஆனால் பௌதீக மீதியாக இல்லாத ரூபா 64,291 வை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 2002 திசெம்பர் 31 ஆந் திகதியிலிருந்து வைப்பிலிடப்பட்டு ஆனால் வசூலிக்கப்படாத காசோலையான ரூபா 51,490 வங்கி கணக்கிணக்கக்கூற்றில் அடிக்கடி முன்கொண்டுவரப்பட்டிருந்தாலும் வசூலிக்கப்படாமைக்கான காரணத்தை அறிந்து அவசியமான செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரியும் வரியும் | 14,566,870 | 3,362,238 | 3,115,160 | 3,101,407 | 18,374,659 | 2,888,330 | 2,781,981 | 3,152,151 |
| ii. | வாடகை | 3,494,480 | 11,861,800 | 6,777,897 | 11,521,830 | 3,732,300 | 6,449,699 | 3,292,339 | 3,818,657 |
| iii | ஏனைய வருமானம் | 18,686,100 | 18,223,421 | 11,471,980 | 55,718,187 | 19,351,720 | 82,882,199 | 9,732,093 | 4,0674,092 |
| | | 36,747,450 | 33,447,459 | 21,365,037 | 70,341,424 | 41,458,679 | 92,220,228 | 15,806,413 | 47,644,900 |

### 2.3.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டிற்காக சபையினால் ரூபா 36,747,450 வருமானமான மதிப்பிடப்பட்டிருந்தாலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,365,037 ஆகும். மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 70,341,424 நிலுவை வருமானம் காணப்பட்டதுடன் அது முன்னைய வருடத்திற்கு நிகராக 47.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

### 2.3.4 வீதவரியும் வரியும்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக வீதவரி மற்றும் வரி அறவிடுதல் 2005 ஆம் வருடத்தின் மதிப்பீட்டை அடிப்படையாக வைத்து இடம்பெற்றதனால் சபைக்கு பெருந்தொகையான வருமானம் இல்லாமை ஆக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2005 ஆம் வருடத்திலே இடம்பெற்ற வீதவரி மதிப்பீட்டிற்காக உரிய அமைச்சரின் அனுமதியை பெற்றிருக்கவில்லை.

(இ) வரி சதவீதம் வர்த்தமானி அறிவித்தலின்றி சபையினால் வினோதவரி என்று மீளாய்வாண்டிலே ரூபா 112,208 அறவிடப்பட்டிருந்தது.

(ஈ) நீர்க் கட்டணம் மற்றும்குப்பை வரி சம்பந்தமாக உப விதிகள் சுமத்தப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 வாடகை

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) முதலாம் குறுக்குத் தெருவிலுள்ள கட்டிடத்திலே 02 கடைகள் உடைந்துள்ளதாக குறிப்பிடப்பட்டு 2015 ஆம் வருடத்திலிருந்து கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 82 கடைகள், அதற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்ட வாடகையாளர்களினால் உப வாடகைக்கு வழங்கப்பட்டுள்ளதன் மூலம் நிகழ்கால மதிப்பீட்டுத் தொகைக்கு அதிகமாக பெருந்தொகை வருமானமொன்றை பெற்றுக்கொண்டிருப்பதுடன் சபையினால் வாடகையாளர்களுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நாளதுவரையாக பேணப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) வாடகை செலுத்தப்படாத கடை உரிமையாளர்களது கடையை முத்திரை இடுவதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் போது 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்தி குழுவிற்கு மின்னேரியா நகரின் கடை உரிமையாளர்களினால் நிலுவை வாடகை சம்பந்தமாக முன்வைக்கப்பட்ட பொய்யான காரணங்களை உள்ளடங்கிய கடிதத்தை அடிப்படையாக வைத்து கடை முத்திரையிடுதலை நிறுத்தி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஒப்பந்தக்காரர்களினால் கடைகளுக்கு உரிய ஒப்பந்தங்கள் மீறப்பட்ட சந்தர்ப்பங்களிலே அவசியமான செயல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 ஏனைய வருமானம்**

-------------------------------

பிரச்சார விளம்பரங்களுக்கு கட்டணங்கள் அறவிடுதல் சம்பந்தமாக உப விதி சுமத்தப்படாதிருந்ததுடன் அறவிடப்பட வேண்டிய கட்டணம் சம்பந்தமாக வர்த்தமானி வெளியிடப்பட்டிருக்கவில்லை. இருந்தாலும் பிரதேச சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்திற்குள் பெருந்தொகையான விளம்பரங்கள் பிரச்சாரப்படுத்தப்பட்டு வருவதுடன் வருமானபரிசோதகர்களினால் விளம்பரப் பலகைகள் சம்பந்தமாக பரிசோதனைகள் நடாத்தப்பட்டு அவை ஏடுகளுக்குட்படுத்தப்பட்டு உரிய கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

-------------------------------------

**3.1 செயலாற்றல்**

---------------------

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) மீளாய்வாண்டிலே பாதீட்டின் மூலம் ரூபா 5,025,000 நிதிஏற்பாடு செய்யப்பட்ட 17 செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) உப விதிகள்**

---------------------

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் 27 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக அவசியமான உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருப்பினும் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது 19 விடயங்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த உப விதிகளை தொடர்புபடுத்தப்பட்டிருந்ததுடன் 08 விடயங்களுக்காக உபவிதிகள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது.

**(இ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

--------------------------------------------------

சபையினால் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டியிருந்த 27 விடயங்கள் சம்பந்தமாக மீளாய்வாண்டிலே செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) சபையினால் அதிகாரமற்றமுறையில் குப்பைகளை கொட்டுகின்ற ரொடவெவ வன பாதுகாப்பு பகுதியில் குப்பை மேட்டினில் தீ எரிந்து கொண்டிருப்பதுடன், அதனால் வனபாதுகாப்பு பகுதியினுள் காணப்படுகின்ற சிறிய புல்வகையினூடாக வன உட்பகுதிக்குள் தீ பற்றிக்கொள்வதற்கான அபாயம் காணப்படுகின்றன.

(ii) யானைகள் உட்பட வனசீவராசிகளினால் பொலித்தினூடனான குப்பைகளை உணவுக்காக பயன்படுத்தல் தொடர்ந்து இடம்பெறுதல் ஜீவராசிகளின் உயிருக்கு பெரும் அச்சுறுத்தலாக காணப்படுகின்றது.

(iii) மழைக்காலங்களில் குப்பைகளுடன் கலக்கப்படும் நீர் குப்பைகள் அண்மையில் காணப்படுகின்ற கால்வாய் ஊடாக குடிநீர் மூலங்களுடன் சேர்வதற்கான அபாயம் காணப்படுகின்றன.

(iv) சபையினால் முறையாக குப்பைகளை எடுத்துச் செல்வதில்லை என்று பலதரப்பட்டவர்களினால் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும் அது சம்பந்தமாக பரீட்சித்து அவசியமான செயல் நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை.

(எ) குப்பைகளை வகைப்படுத்தி ஒப்படைக்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ள போதிலும், வகைப்படுத்தப்படாமல் குப்பைகளை வழங்குதல் தொடர்பான அவசியமான செயல் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் எந்தவிதமான வகைப்படுத்தலுக்கும் மற்றும் மீள்சுழற்சிக்கு உட்படுத்தலுக்குமல்லாமல் குப்பைகள் கொட்டப்பட்டு வருகின்றன.

**(உ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(i) ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் சம்பந்தமாக சபை அறிந்திருந்த போதிலும் அந்த நோக்கங்களுக்கிடையில் சபைக்கு பொருத்தமான நோக்கங்களை சரியாக இனங்கண்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டை தயாரிக்கும் போது தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதியில் BD/CBD/4/1/2-2018 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின்படி இனங்காணப்பட்டிருந்த போதிலும் குறிகாட்டிகளின் தரவுகளை ஒன்றுசேர்க்கும் முறைமையொன்று காணப்படவில்லை.

(iii) இலக்குகளை அண்மிக்கும்போது உரிய காரியங்களை மேற்பார்வை செய்வதற்கான இடங்களை இனங்கண்டிருக்கவில்லை என்பதுடன் குறிகாட்டிகளினால் தரவுகளை ஒன்றுசேர்க்கும் முறைமையொன்றும் காணப்படவில்லை.

(iv) 2016 மற்றும் 2017 ஆம் வருடங்களின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி அண்மிப்பதற்காக அவசியமான நிதிஏற்பாடுகளை சபையின் மூலம் இனங்கண்டிருக்கவில்லை.

(v) இலக்குகளை நோக்கி அண்மிப்பதற்காக நிறுவனங்களின் பதவியணியினரை பயிற்றுவிக்கும் முறைமையொன்று காணப்படாதிருந்ததுடன் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக தொடர்புகளை வைத்திருக்க வேண்டியஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவில்லை.

**(ஊ) சுற்றாடல் பிரச்சினைகள்**

-----------------------------------------

பொருத்தமான இடமொன்று இல்லாததன் காரணமாக 2016 ஒக்டோபர் 26 ஆந் திகதியிலிருந்து 2018 பெப்ரவரி 06 ஆந் திகதி வரை மலசலக்கழிவுகள் போக்குவரத்து நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. பொதுமக்களின் சுகாதாரத்திற்கு

அச்சுறுத்தலாக காணப்பட்டதன் காரணமாக 2018 பெப்ரவரி 26 ஆந் திகதியிலிருந்து மீண்டும் மலசல கழிவுகள் கல்ஓயா வன பாதுகாப்புப் பகுதிக்கு அனுமதியற்ற வகையில் கொட்டப்பட்டு வந்ததுடன் அதற்காக முறையான வகையில் சுத்தகரிப்பு கட்டமைப்பொன்று உருவாக்கப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வருவன அவதானிக்கப்படுகின்றன.

(அ) செலுத்துவதற்கு முடியாத நிலையிலுள்ள ரூபா 16,482,050 பெறுமதியான 04 வாகனங்களை திருத்தியமைப்பதற்கு அல்லது அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 சனவரி மாதத்திலே வீதி அழுத்தும் இயந்திரத்தின் இரண்டு மோட்டார்களை திருத்தியமைப்பதற்காக தனியார் கம்பனிக்கு அனுப்பப்பட்டாலும் திருத்தியமைத்து மீண்டும் பெறப்பட்டிருக்கவில்லை என்பதுடன் அது தொடர்பாக பின் விபரம் மேற்கொண்டிருக்கவில்லை.

(இ) முறையாக ஒப்பந்தத்திற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத மற்றும் நிலத்தின் உரிமையை தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத அரைப்பங்கு செய்துமுடிக்கப்பட்ட இந்த கட்டிடத்தின் மேல் மாடிக்காக செலவிடப்பட்ட செலவுகள் பிரயோசனமற்று காணப்பட்டது.

(ஈ) ஹிங்குரக்கொட நகர மத்தியில் உள்ள சபைக்கு சொந்தமான மணிக்கூட்டு கோபுரம் 2014 ஆம் ஆண்டிலிருந்தும், ஜயந்திபுர மணிக்கூட்டு கோபுரம் பல வருடங்களுக்கு முன்பிருந்து செயலிழந்து காணப்படுவதுடன் அவற்றை திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கையை விஞ்சி 08 நிரந்தர வேலையாளர்களின் சேவையை உட்படுத்தியிருந்தனர்.

(ஆ) இடமாற்றம் பெற்றுச்சென்ற, இறந்து போன, இளைப்பாறிச் சென்ற, வேலை நிறுத்தப்பட்ட, சேவையிலிருந்து நீக்கப்பட்ட மற்றும் சேவையை விட்டுச்சென்ற 58 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 668,318 அறவிடப்பட வேண்டி காணப்பட்டது.

**3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வருமானக் கட்டுப்பாளர்களினாலும் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களினாலும் வெளிக்கள பரிசோதனைகளின் மூலம் தெரியவந்த 18 அனுமதியற்ற நிர்மாணங்கள் சம்பந்தமாக அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரக்கொட புகையிரத பாதுகாப்பு சபையினால் நடாத்தப்பட்டு வருகின்ற கடைகளுக்காக வருடாந்த வரி வாடகையாக ரூபா 523,250 சபையினால் செலுத்தப்பட்டாலும் வருடத்திற்குள் சபைக்கு கிடைத்துள்ள வருமானம் ரூபா 135,000 மட்டும் தான்.

(இ) சபையின் நிதியத்தை செலவு செய்து உருவாக்கப்பட்ட 16 வழக்கறிஞர் காரியாலங்கள் கொண்ட கட்டிடத்தின் நிலுவை டென்டர் பணமான ரூபா 3,205,825 மற்றும் மாதாந்த வாடகையான ரூபா 352,000 வை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கடைகளுக்கான மதிப்பீட்டை மேற்கொள்ளாமல் மாதாந்தம் ரூபா 500 அறவிடுவதாக தீர்மானிக்கப்பட்டாலும் 2014 ஆம் வருடத்திலிருந்து 2017 ஆம் வருடம் வரை அந்த பணத்தையும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற மற்றும் குறை உபயோகமான சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ உதவி மத்திய நிலையத்தின் மூலம் ஹிங்குரக்கொட பிரதேச சபைக்கு 2015 மார்ச் 31 ஆந் திகதி வழங்கப்பட்ட உயிர்வாயு அலகு பாவனைக்கு உட்படுத்தப்படாமல் விளைவற்ற சொத்தாக மாறியுள்ளது.

(ஆ) ரூபா 130,862 பெறுமதியான சீமெந்து ப்லொக்கல் செய்யும் இயந்திரம் விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) முதலாம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள கடைகளுள்ள கட்டிடத்தில் மேல் மாடியில் உள்ள 05 சேதமடைந்துள்ள கடைகளும், அதற்கு அடுத்ததாகவுள்ள மண்டபமும், பல வருடங்களாக விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) சபையின் 7 நீர்த் திட்டத்திற்கு உரிய நிலமும் உபகரணங்களும், மின்னேரியா நூல் நிலையத்திற்குரிய 3 ஏக்கர் நிலம், நாகலகந்த பழைய ஊர் சபைக்கு உரிய மலசலகூடங்கள் அமைந்த 01 ஏக்கர் நிலம், மின்னேரியா பொது மலசலகூடங்களுடனான 01 ஏக்கர் நிலம் புலதிசிகம முன்பள்ளியுடனான நிலம், ஜயந்திபுர உப காரியாலயம், ஜயந்திபுர மணிக்கூட்டுக் கோபுரம் ஆகிய சொத்துக்களின் உரிமையை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

சபையினால் 2017 ஆம் வருடத்திற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.2 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆர்.பீ.எஸ் மாரசிங்க தோட்ட விளையாட்டு மைதானத்தின் அண்மையிலுள்ள வீதியை குட்டி கல் பதித்து அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் வீதியின் இருமருங்கிலும் போடப்பட்டிருந்த மண் தட்டு கழுவுண்டு போனதால் காண் கட்டமைப்பு மூடப்பட்டிருந்தது. மேலும் அந்த வீதியின் பக்க சுவருக்கு அண்மையில் சில இடங்களில் சிறிய அளவில் கீழ் இறங்கியிருந்ததுடன் மேற்பரப்பு மட்டம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஹிங்குரக்கொட சேவா பியசைக்கு அடுத்து அபிவிருத்தி செய்யப்பட்ட விளையாட்டு மைதானத்தின் சில இடங்களில் மண்ணை சிறிதாக்கி அழுத்தப்படாதிருந்ததுடன் குவிக்கப்பட்ட நிலைமை காணப்பட்டதுடன் மண் கழுவுண்டுச் சென்றிருந்தது.

(இ) (i) வட கிழக்கு மாகாண சபைகள்சேவையை மேம்படுத்தும் செயற்திட்டத்தில் (NELSIP) செயற்திட்டத்தின் நிதியத்தை உபயோகித்து ரூபா 40,107,396 வுக்கு ஒப்பந்தத்தின் கீழ் ஹிங்குரக்கொட பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் வியாபாரத்தொகுதி நிர்மாணிக்கப்பட்டு 2017 யூன் 20 ஆந் திகதி சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காகவெட் அடங்காத ரூபா 51,177,249 ஆன விலைப்பட்டியலும் (பில்) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தப் பெறுமதிக்கு மேலதிகமாக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 11,069,853 வுக்கான அதிக பெறுமதிக்காக எவ்வித அனுமியும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலுள்ள கட்டிடத்திற்காக மின்சாரம் இல்லாததன் காரணமாக கடைகள் இதுவரை திறக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

சபையினால் வருமான மற்றும் செலவுகளை சரியாக இனங்காணாமல் மதிப்பீட்டை தயாரித்ததனால் 07 வருமான விடயங்களுக்கு 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சிலும் 07 செலவின விடயங்களுக்கு 12 சதவீதம் முதல் 134.5 சதவீதம் வரையான வீச்சீலும் விலகல்கள் ஏற்பட்டிருந்ததுடன் பாதீட்டுப் பதிவுகள் பயன்தரு நிதிக்கட்டுப்பாட்டு காரியங்களாக பாவனைக்கு உட்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அடிக்கடி சபையின் அவதானத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) சொத்துக்கள் குறை உபயோகமாக காணப்படுதல் |
| | (ii) கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாமை |
| | (iii) அனைத்து நிலையான சொத்துக்களையும் பதிவுக்குட்படுத்தி நாளதுவரையாக பேணப்பட்டிராமை. |

| | | | |
|---|---|---|---|
| | | (iv) | சொத்துக்களின் உரித்து கையேற்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிலுவை வருமானம் அறவிடப்படாமை. |
| | | (ii) | வேலைகள் தொடர்பான கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாமை, மற்றும் பதிவுக்குட்படுத்தாமை |
| | | (iii) | உப விதிகள் விதிக்கப்படாமை |
| (இ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்து வைக்காமை |
| | | (ii) | கால பகுப்பாய்வு தயாரிக்கப்படாமை |
| | | (iii) | உப ஏடுகள் பராமரிக்கப்படாமை |
| (ஈ) | திண்மக்கழிவு முகாமைத்துவம் | (i) | குப்பைகளை முகாமைத்துவத்திற்காக நிலமொன்றை பெற்றுக்கொள்ளாமை |
| | | (ii) | குப்பைகளை வகைப்படுத்திக் கொள்ளாமல் கொட்டுதல் |
| | | (iii) | முறையற்ற விதத்தில் வனபாதுகாப்பு பகுதிக்கு குப்பைகளை கொட்டுதல் |
| | | (iv) | குப்பைகளை மீள்சுழற்சிக்கு உட்படுத்தாமை |